# வசதிகள் வளராத பொழுதுகள்

இன்று இங்கு மேல் நாட்டு வாழ்க்கையின் இயந்திர ஓட்டம். வசதிகள் நிறைந்த வாழ்க்கை. நிம்மதி தொலைந்த நிலை. பண வேட்டையை நோக்கிய ஓட்டம்.

அன்று எம் கிராமிய வாழ்க்கையில் எளிமையான நிலையிலும் இனிமையாக கழிந்த நாட்கள். மின்சாரம், குளியலுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரம், மலகூடம், வானொலி, தொலைக்காட்சி என்பன இல்லங்களில் இல்லாது இருந்த நாட்கள். பின்னர் எம் பால்ய வயதில் எம் கண் எதிரே எம் இல்லத்தில் புகுந்த நினைவுகள் நெஞ்சில் எழுகின்றன. பழமையின் நினைவு நெஞ்சை குளிர்விக்கின்றது.

இருபது பரப்புக் காணிக்குள் அமைந்த நாற்சார் வீடு அது. தென்னைகள், கமுகு, வாழை, எலுமிச்சை, மாதுளை, புளித்தோடை, மாட்டுக் கொட்டில் என்று கிராமிய வீட்டுக்குரிய அடையாளங்கள் அனைத்தும் அடங்கிய வீடு.

1958அம் ஆண்டு அளவில்தான் தெல்லிப் பழைக் கிராம சபைக்குள் அடங்கிய கொல்லங் கலட்டி வீதிக்கும் மின்சாரம் வந்தது. வீதியை ஒட்டி நின்ற நூற்றாண்டுகள் கண்ட மரங்களும் தறிக்கப்பட்டுத்தான் மின்சாரம் ஊருக்குள் நுழைந்தது.

பிள்ளைவரம் வேண்டி அம்மம்மாவின் தகப்பனார் நட்ட அரசமரம். நாலுபேர் நின்று கைவிரித்தால்தான் கட்டிப் பிடிக்கலாம் என்ற அளவுக்கு அகல சுற்றளவு. ஆயிரம் குடம் ஊற்றி வளர்த்த அந்த மரமும் தறிக்கப்பட்டது.

கொங்கிறீற் கம்பங்களில் சமாந்திரமாக நாலு மின்சாரக் கம்பங்கள். வீட்டுக்கு வீடு வெளிச்சம் தந்தது. கம்பங்களில் உள்ள மின்சார விளக்குகளை ஆரம்ப காலத்தில் கண்டபோது ஊருக்கு ஒரு குஷி.

சுதந்திரமாகப் பறந்த வவ்வால்கள், காகங்கள் அவ்வப்போது இந்த மின்சாரக் கம்பிகளுக்கிடையே இறந்து தொங்குவதும் இந்த வசதி கண்ட அவலங்களில் ஒன்று.

அதே வீதியில் 792 இலக்க பஸ் ஓட ஆரம்பித்ததும் அதை ஒட்டிய காலம்தான். இதற்காக சிரமதான முறையில் வீதிகள் அகட்டப்பட்டதும் சிரமதான பணியாளர்களுக்கு வீதியில் உள்ள வீட்டுக்காரர் தேனீர், வடை, மோதகம் என்று உபசாரம் செய்வதும்கூட ஒரு நீங்காத நினைவு.

## ஊரின் வாசம்

**சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்**

இதே வீதியில் இரட்டைத்தட்டு பஸ் ஓட ஆரம்பித்தபோது கிணற்றடியைச் சுற்றி வேலிகள் உயரமாக அடைக்க வேண்டிய தேவையும் சில வீட்டுக்காரருக்கு எழுந்தது.

மலகூடத்தை வீடு காணாதவரை பின் வளவுதான் மலகூடம். ஒவ்வொரு வீட்டுக்கும் புலவுகள், பனை வளவுகள் இருந்த நிலையில் அந்த வளவு மூலைக்குள் மலகூடம் அமைந்திருந்தன.

5அடி நீள 3அடி அகல 4அடி ஆழம் வரையான மல குழிகள். குறுக்காக பிளந்த பனைமரக் குற்றிகள். சுற்று வேலி. இயற்கை உபாதைகளை காற்றாட இருந்து கழிக்கக் கூடிய வசதி. உடையவர்கள் இல்லாத பனங் காணிகளும் மலக்கழிப்புக்கு உரியதாக பயன்படுத்துவதும் உண்டு. அடுப்புச் சாம்பல் போட்டு மலகூட துர்வாசம் அடக்கப்பட்டுவிடும்.

மாரி மழைக்கு வெள்ளம் முட்டும்போதுதான் இந்த மலக்குழிப் பயன்பாடு திண்டாட்டம் காணும். கிராம சபை மூலம் மலகூடம் கட்ட பண உதவி அறிமுகப்படுத்தப்பட்டபோது இந்த மலக்குழிப் பாவனை முடிவுக்கு வந்தது.

மின்சாரம் வந்த கையோடு மின்சார மோட்டரும் வந்தன. இருபுற பூவரசுகளிலும் கட்டிய பண்களில் அச்சு மரத்தில் தொங்கிய துலாவை இடித்து வாளியால் நீர் அள்ளிக் குளித்த காலம் போய் கொட்டுக்குள் குழாய்களால் நீர்நிரப்பிக் குளிக்கக் கூடிய வசதி. வளர்ச்சி.

வாய்க்கால்கள் உடைப்பு எடுக்கும் அளவுக்கு நீரை பீச்சி அடிக்கின்ற குழாய் களால் தென்னைகளுக்கும் நீர் இறைக்கின்ற வசதி.

இரண்டு பேர் துலாமிதிக்க துலாக் கயிற்றில் தொங்குகிற பட்டையால் நீர் அள்ளி வாய்க்காலுக்குவிட்டு இறைக்கின்ற முறை முடிவுக்கு வந்ததும் துலாப் பாவனை தொலைய ஆரம்பித்ததும் இதே காலத்தில்தான்.

தோய்ந்த உடுப்புக்கு ஸ்திரி போட 'அயன் பொக்ஸ்' என்று மின்சார முறை வரும் முன்பு ஸ்திரியைப் பெட்டிக்குள் சிரட்டைக்கரி நெருப்புத்தான் பயன்பட்டது.

முற்றத்தில் சிரட்டைகளை வைத்து நெருப்பு மூட்டி தணல் நிலை வந்ததும் அதை ஸ்திரிகைப் பெட்டிக்குள் போட்டு அதற்கு சூடேற்றி ஸ்திரிகை செய்யும் முறை.

சலவை தொழிற் கூடங்களில் கூட சிரட்டைக் கரி ஸ்திரிப் பெட்டி நீண்டகாலம் பயன்பாட்டில் இருந்தன. பெட்டிக்குள் உள்ள தணற் பொறிகள் உடுப்பைப் பதம் பார்ப்பதும் இந்த ஸ்திரிகை முறை கண்ட அவலம்.

வானொலிப் பெட்டிகள் பற்றறி பாவனை யோடு பயன்பாட்டில் இருந்தபோதும் மின்சாரம் வந்த பின்தான் வீட்டுக்கு வீடு மின்சார வானொலிகள் வலம் வந்தன.

வானொலிப்பெட்டி ஒரு வீட்டில் வந்தால் அயல் வீடுகளுக்கும் கேட்கும் வகையில் பாடல் ஒலிக்கும். கல்யாண வீடுகளில் மட்டும் உயரக் கட்டிய ஸ்பீக்கர் மூலம் மூன்று தினங்கள் ஊருக்குள் பாட்டு ஒலித்த நிலைப்பாடு மாறி வீட்டுக்கு வீடு வானொலியில் பாட்டு ஒலிக்கும் நிலைப்பாடும் 1960 அளவிலேயே யாழ்ப்பாணம் எங்கும் அதிகரித்தன.

சினிமாப் படம் பார்க்க யாழ்ப்பாணம் நகருக்கு போக வேண்டிய நிலை. ராணி தியேட்டர், வெலிங்டன், வின்ஸர், ராஜா தியேட்டர் என புதுப்பட கட் அவுட்டுகள் ஓவியர் மணியத்தின் கைவண்ணத்தில் ஒவ்வொரு திரை அரங்கிலும் நிமிர்ந்து நிற்கும்.

கலறி 65சதம், 2ம்வகுப்பு 1ரூபா இருபத்தைந்து சதம், றிசேவ் 2.50 என எம் அறிவு வந்த காலக் கட்டணங்கள்.

சிவாஜி, எம்.ஜி.ஆர் படங்கள் முதல் நாளே கலகலப்பு காணும். ஐந்து காட்சிவரை ஓடும். சுகாதாரப் பகுதியினர் இடையிடையே பொது இடங்களில் போட்டுக் காட்டும் 'பிலிம் ஷோ'வுக்கும் படம் என்ற வகையில் அந்த நாளில் மதிப்பு அதிகம்.

இவைகளில் எத்தனை பதிவுகளை இன்றைய சந்ததி அறியும்?

அந்த நாட்களை இந்த நாட்களோடு ஒப்பிடும் எமக்கு கவிஞர் கண்ணதாசனின் பாடல்வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

'பறவையைக் கண்டான் விமானம் படைத்தான், பாயும் மீன்களில் படகினைக் கண்டான், எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான், எதனைக் கண்டான்'

### இனிவெறி

மாடுகள் காணாமல்போகும் என்று

தோலில் குறிபோடும் எங்கள் மண்

கொஞ்சநாளாய்...

மனிதர்களையே காணவில்லையே

- காசி ஆனந்தன்


# Ratna & Company Solicitors



We are accredited both by Law Society and the Legal Services Commission, as providers of quality service, in all areas of Immigration law.

We are authorised by the Legal Services Commission to provide free legal advice (If you are entitled for the same).

Contact:
**Mr. M. or Mrs. K. Ratnapalan**

T: **020 8470 8818** F: **020 8475 0131**
M: **07769 748 409**

Visit: www. ratna.co.uk Email: mratnapalan@hotmail.com

169A High Street North, East Ham, London. E6 1JB

- தேசியம் குடியுரிமை அகதி நிலை ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள்
- ஐக்கிய ராச்சியத்தில் 7/10/14 வருடங்கள் வசித்தவராயிருப்பின் நிரந்தர வதிவிட விண்ணப்பங்கள்
- தொழில் அனுமதி, மனித உரிமை, தடுத்து வைத்தல் தொடர்பான விடயங்கள்
- வீடுகள் விற்பனை நிலையங்கள் வாங்குதல் விற்றல் remortgage, transfer of equity வசதிகள்
- remortgage, transfer of equity
- Power of Attorney / Last will; / Sponsorship விடயங்கள்
- குடும்ப திருமண விவகாரங்கள்
- இலவச சட்ட ஆலோசனை வழங்குவதற்காக Legal services Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
- எமக்குத் தொடர்ந்தும் Immigration & Asylum சட்டத்தில் இலவச சட்ட ஆலோசனை கொடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது